In the Court of the Principal District & Sessions Judge, Thoothukudi

Case No : SC.514/2023

Deposition of P.W.8

****

Name திரு.தனசேகரன்

Father's Name

Village

Taluk

Calling

Age

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 23rd day of September 2025.

**Accused absent. Petition u/s.355 BNSS is filed and allowed.**

**முதல் விசாரணை :**

நான் தற்போது திருச்செந்தூர் வட்டம், காயாமொழி கிராமத்தில் கிராம நிர்வாக அதிகாரியாக பணியிலிருந்து வருகிறேன். நான் இதற்கு முன்பு 2020-2021ல் கந்தசாமிபுரம் கிராமத்தில் கிராம நிர்வாக அதிகாரியாக பணிபுரிந்தேன். 06.10.2020 அன்று 12.45 மணிக்கு ஆறுமுகநேரி காவல் நிலைய ஆய்வாளர் செல்வி என்பவர் என்னை போனில் தொடர்பு கொண்டு சீனந்தோப்பு விலக்கின் அருகே உள்ள ரோட்டிற்கு வருமாறு அழைத்தார். அதன் பேரில், நான் அங்கு சென்றேன். நான் அங்கு போன போது, அங்கே ஆய்வாளர் மற்றும் காவலர்கள் இருந்தனர். லிங்கராஜா என்பவரும் இருந்தார். அங்கு தான் லிங்கராஜாவின் பைக் பதிவெண் TN 92 A 0346 Bajaj CT 100 இருந்தது. லிங்கராஜாவிடம் ஆய்வாளர் கொலை குற்ற சம்பவம் குறித்து வாக்குமூலம் பெற்று, அதனை அறிக்கையாக ஆய்வாளர் எழுதிக் கொண்டார். பின்னர், சீனந்தோப்பு மேல்புறம் உள்ள ஐயன்கோவில் பின்புறம் லிங்கராஜா மற்றும் நாங்கள் எல்லோரும் சென்று அங்கு லிங்கராஜா ஒரு வெட்டருவாள், இரத்த கரை படிந்த சட்டை மற்றும் பேண்ட் ஆகியவற்றை எடுத்து வந்து ஆய்வாளரிடம் ஒப்படைத்தார். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் வெட்டருவாள் அங்கு கைப்பற்றப்பட்ட வெட்டருவாள் ஆகும் (அது ஏற்கெனவே சா.பொ.1 ஆகக் குறியீடு செய்யப்பட்டுள்ளது) மற்றும் தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் இரத்த கரை படிந்த

RAMANUJAM VASANTHI

Digitally signed by RAMANUJAM VASANTHI
Date: 2025.09.23 14:18:48 +0530

சட்டை, பேண்ட்டும் எதிரி எடுத்து ஆய்வாளரிடம் ஒப்படைத்தது தான். அந்த இரத்த கரை படிந்த சட்டை சா.பொ.5 ஆகும், இரத்த கரை படிந்த பேண்ட் சா.பொ.6 ஆகும். அந்த கைப்பற்றுதல் அத்தாட்சியில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையது தான். அது **அ.சா.ஆ.4** ஆகும். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் பைக் தொடர்பான கைப்பற்றுதல் மகஜரில் உள்ள கையொப்பம் என்னுடையது அல்ல. எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது. என் முன்னிலையில் தான் எதிரி ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார். ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.சா.ஆ.5** ஆகும். இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>குறுக்குவிசாரணை :</u>**

சீனந்தோப்பு பகுதி என்பது கந்தசாமிபுர வரையறைக்கு உட்பட்டது. நான் பணியிலிருந்த போது கிராம உதவியாளர் பணி காலியாக இருந்தது. அதில் பணிபுரிந்தவர் ஓய்வு பெற்று விட்டார். எனக்கு ஆய்வாளர் 12.45 மணிக்கு போன் செய்தார். சீனந்தோப்பு விலக்கு மூன்று முக்கு சந்தா அல்லது நான்கு முக்கு சந்தா என்றால் மூன்று ரோடுகள் சந்திக்கும் இடம் ஆகும். சீனந்தோப்பு சாலையிலிருந்து சீனந்தோப்பு விலக்கு எவ்வளவு துாரத்தில் இருக்கும் என்றால் சீனந்தோப்பு சாலை மற்ற சாலைகளுடன் சேருமிடத்தில் தான் விலக்கு உள்ளது. ஆய்வாளர், இரண்டு காவலர்கள், சுதன் மற்றும் லிங்கராஜா ஆகியோர் நான் போகும் போது அந்த இடத்தில் இருந்தனர். சீனந்தோப்பு விலக்கு பகுதி சிறிய அளவில் ஆள் நடமாட்டம் இருக்கும். கடைகள் அருகில் உள்ளதா என்றால் இல்லை. நான் சீனந்தோப்பு விலக்கு அருகே வரும் போது 1 மணி இருக்கும். லிங்கராஜாவை நான் அங்கு போவதற்கு எவ்வளவு நேரத்திற்கு முன்பு கைது செய்து வைத்திருந்தனர் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். அங்கி நின்றிருந்த பஜாஜ் சிடி 100 பைக் லிங்கராஜாவுடையது தானா அல்லது இல்லையா என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை காவலர் உதவியுடன் ஆய்வாளர் எழுதினார். எதிரியை விசாரித்து விசாரித்து எழுதுவதற்கு சுமார் இரண்டு மணி நேரத்திற்கு மேல் ஆனது. அவ்வாறு எழுதப்பட்ட ஆவணத்தில் தான் நான் கையெழுத்து போட்டேன் என்றால் சரிதான். சீனந்தோப்பு விலக்கிலிருந்து ஐயன்கோவில் எவ்வளவு துாரத்தில் இருக்கும்

RAMANUJAM VASANTHI

Digitally signed by RAMANUJAM VASANTHI
Date: 2025.09.23 14:18:56 +0530

என்றால் ஒரு கிலோ மீட்டருக்குள் இருக்கும். ஐயன்கோவிலுக்கு வரும் போது 3.15, 3.30 மணி இருக்கும். ஐயன்கோவிலின் பின்புறம் மேற்கு திசையில் சுமார் 50 மீட்டர் துாரத்திற்கு குறைவான இடத்தில் தான் சான்று பொருட்கள் கைப்பற்றப்பட்டது. அந்த பேண்ட் சட்டையால் அரிவாளை சுற்றி வைத்திருந்தார். அதனை எடுத்து லிங்கராஜா ஆஜர் செய்தார். அந்த பொருட்கள் வெளியே தெரியும் படி தான் இருந்தது. குழி தோண்டி மறைத்து வைத்திருக்கவில்லை. அத்தாட்சியில் நான் கையெழுத்து போடும் போது மூன்றரை மணி இருக்கும். அந்த அத்தாட்சியை காவலர் உதவியுடன் இன்ஸ்பெக்டர் எழுதினார். என் முன்னிலையில் நான் சொன்ன நாளில், சொன்ன இடத்தில் பொருட்கள் கைப்பற்றப்பட்டதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. காவல் நிலையத்தில் உருவாக்கி வைத்திருந்த ஆவணங்களில் தான் நான் கையெழுத்து போட்டு விட்டு அதனடிப்படையில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை :</u>**

**இல்லை.**

என்னால் திறந்த நீதிமன்றத்தில் எதிரி/எதிரிகள் தரப்பு முன்னிலையில் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டு கையெழுத்து/கைரேகை செய்யப்பட்டது.

RAMANUJAM VASANTHI
Digitally signed by RAMANUJAM VASANTHI
Date: 2025.09.23 14:19:04 +0530

**முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,**
**தூத்துக்குடி.**